## கைத்தொழில் தொழிநுட்ப நிறுவகம் - 2016

கைத்தொழில் தொழிநுட்ப நிறுவகத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1994 இன் 11 ஆம் இலக்க விஞ்ஞான மற்றும் தொழிநுட்பத்தை முன்னேற்றும் சட்டத்தின் vii ஆம் பகுதியின் 40 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

அதி உயர் கணக்காய்வு நிறுவகங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க நடத்தப்படும் கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்கள் மீதான அபிப்பிராயம் ஒன்றினை வெளிப்படுத்தல் எனது பொறுப்பாகும்.

### 1.4 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ்வறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிட்ட விடயங்களின் விளைவாக நிதி நிலைமைக் கூற்றில், வருமானக் கூற்றில் மற்றும் உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்றில் மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றில் பதிவு செய்யப்பட்ட அல்லது பதிவு செய்யப்படாத விடயங்கள் தொடர்பாகவும் மூலாதாரங்கள் தொடர்பாகவும் ஏதும் செம்மையாக்கல்கள் அவசியமானவையாக காணப்படுகின்றதான என்பதை நான் நிச்சயிக்க முடியாதுள்ளேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 மறுப்பு அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க இந் நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் ஒன்றினை தெரிவிக்கவில்லை.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07**

(i) நியமத்தின் 14(ஆ) பிரிவின் பிரகாரம் சொத்து விடயம் தொடர்புடைய எதிர்கால நலன்கள் அல்லது சேவை சாத்தியக்கூறு நிறுவனத்தை நோக்கி உள்வரும் சாத்தியம் இருக்கும் போது ஆதனங்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் என இனங்காணப்பட வேண்டிய போதிலும், 2016 ஆண்டின் போது அடிப்படை கிரயம் ரூபா 24,119,273 தொகை செலவிடப்பட்டு கொள்வனவு செய்திருந்த போடபல் அம்பியன்ட் எயார் கொலிடி மெஷரின் இயந்திரம் (Portable Ambient Air Quality Measuring Equipment ) 2016 அக்தோபர் 31 ஆம் திகதி முதல் ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் என இனங்காண வேண்டுமெனினும், மீளாய்வாண்டிற்கான சொத்து ஒன்றென அதனை இனங்கண்டிருக்கவில்லை.

(ii) நியமத்தின் 49 ஆம் பிரிவின் பிரகாரம் ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரண விடயங்களை மீள் மதிப்பீடு செய்யும் போது, அச் சொத்துக்கள் உரித்தாகும் வகுப்பினை முற்றாக மீள்மதிப்பீடு செய்ய வேண்டுமெனினும், நிறுவகத்தின் ரூபா 80,446,056 இற்கான கிரயத்தையுடைய 23 மோட்டார் வாகனங்களில் ரூபா 37,390,367 தொகையான கிரயத்தையுடைய 11 மோட்டார் வாகனங்களை மாத்திரம் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது.

(iii) நியமத்தின் 90 ஆம் பிரிவின் பிரகாரம் ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரண வகுப்பொன்றினை மீள்மதிப்பீட்டு பெறுமதிகளுக்கு வெளிப்படுத்தியிருந்த போது 90 ஆம் பிரிவின் (அ) முதல் (எ) வரையான பிரிவுகளின் பிரகாரம் வெளிப்படுத்துதல் மேற்கொள்ளப்பட வேண்டிய பொருள் நிறுவகத்தினால் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தியிருக்கவில்லை.

(iv) நியமத்தின் 65 ஆம் பிரிவின் பிரகாரம் நடைமுறை அல்லாத சொத்துக்களின் ஆக்கபூர்வமான வாழ்க்கைக் காலத்தை வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாமையினால் ரூபா 543,456,926 தொகைக்கான ஆதனங்கள் பொறித்தொகுதிகள் உபகரணங்கள் முற்றாக பெறுமானத்தேய்வு செய்திருந்த போதிலும், தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டுக் காணப்பட்டது. அதன் பிரகாரம் ஏற்பட்டிருந்த மதிப்பீட்டு வழுவினை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 3 இன் பிரகாரம் சீர்த்திருத்தம் செய்திருக்கவில்லை.

**(ஆ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 08**

உடன்பட்டுள்ளவாறு மேற்கொள்ளப்பட்டிருக்காத செயற்திட்டம் ஒன்றிற்காக ஐரோப்பிய சங்கத்திற்கு செலுத்தப்பட வேண்டிய ரூபா 12,300,860 தொகை தொடர்பாக நிதிக்கூற்றுகளில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**(இ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 09**

நியமத்தின் 15 ஆம் பிரிவின் பிரகாரம் இருப்பினை அளவிடும் போது கிரயம் அல்லது நிகர தேறிய பெறுமதி ஆகிய இரண்டில் குறைந்த பெறுமதியிலே அளவிடப்பட வேண்டியிருந்ததுடன் இறுதி இருப்பு பௌதீக இருப்பு கணிப்பீட்டின் மூலம் கணக்கெடுத்து கணக்கீடு செய்யப்பட வேண்டும். எனினும் அதற்கு முரணான இருப்பு அளவிடல் கொள்கை இனங்கண்டிருந்ததுடன் இருப்புக்களின் புத்தகப் பெறுமதிக்கே கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நடைமுறையாண்டின் போது பணமாக பெற்றிருந்த வட்டி வருமானம் ரூபா 17,391,528 தொகை எனினும், அதனை ரூபா 19,942,279 தொகை என காசுப்பாய்ச்சல் கூற்றில் நிதித் தொழிற்பாடுகளில் காட்டப்பட்டிருந்தமையால் காசுப்பாய்ச்சல் கூற்றில் ஒத்த தன்மை சமநிலை மீது கணக்காய்வின் போது கேள்விக் குறியாகவுள்ளது.

(ஆ) மீளாய்வாண்டின் வியாபார அல்லது வியாபார அல்லாத கடன்பட்டோருக்கான முறையே ரூபா 6,532,538 தொகை மற்றும் ரூபா 719,810 தொகை என கூட்டுத்தொகை ரூபா 7,252,348 தொகை அறவிட முடியாத கடன் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மொத்தத் தொகையையும் வியாபார கடன்பட்டோர் மீதியில் இருந்து கழித்துக் காட்டியிருந்தமையால் வியாபாரக் கடன்பட்டோர் ரூபா 719,810 தொகையினால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(இ) நிறுவகம் மீளாய்வாண்டின் போது தேசத்தை கட்டியெழுப்பும் வரி என ரூபா 4,788,041 தொகையொன்று உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு அனுப்பியிருந்த போதிலும் தேசத்தை கட்டியெழுப்பும் வரிச் செலவு என வருமானக் கூற்றில் ரூபா 4,310,255 தொகை மாத்திரம் காட்டப்பட்டிருந்த காரணத்தினால் செலவுகள் ரூபா 477,787 தொகையினால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

### 2.2.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த ரூபா 619,137,988 தொகையான கிரயத்தையுடைய ஆதனங்கள் பொறித்தொகுதிகள் உபகரணங்களை உறுதிப்படுத்துவதற்காக பௌதீக மெய்மையாய்தல் ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்காமையினால் அச் சொத்துக்ளின் பெறுமதி தொடர்பாக கணக்காய்வில் திருப்திகரமாக ஏற்றுக்கொள்வதற்கு அல்லது சான்றுறுதி செய்வதற்கு முடியாதிருந்தது.

### 2.2.4 விளக்கமளிக்கப்படாத வித்தியாசங்கள்

நிறுவகத்தின் கடன்பட்டோர் காலப்பகுப்பாய்வு அறிக்கையுடன் கடன்பட்டோர் பேரேட்டின் மீதிகளை இணக்கஞ் செய்த போது 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 04 மீதிகளில் ரூபா 87,702 தொகைக்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது.

## 2.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பல வருட காலம் முதல் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கிய மதிப்பளிக்கப்படாத காசோலைகள் மற்றும் ஏனைய கடன்பட்டோர் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 2,858,744 தொகை மீளாய்வாண்டின் போதும் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) வெளிநாட்டு புலமைப்பரிசில் உடன்படிக்கைகளில் நிபந்தனைகளை மீறிய 18 உத்தியோகத்தர்களிடம் அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 7,810,032 தொகை 2016 திசெம்பர் 31 திகதி வரை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) சேவையை விட்டு விலகிச் சென்றிருந்த உத்தியோகத்தர்கள் மற்றும் சேவையில் உள்ள உத்தியோகத்தர்கள் 352 பேருக்கு சம்பளத்திருத்தம் தொடர்பாக செலுத்த வேண்டிய சம்பளம் என 2009 ஆண்டின் போது ரூபா 7,030,873 இற்கான ஒதுக்கம் ஒன்று செய்யப்பட்டிருந்ததுடன் 2016 திசெம்பர் 31 திகதி அளவில் மேலும் ரூபா 185,739 தொகை மாத்திரம் செலுத்த வேண்டியிருந்தது.

(ஈ) 2009 ஆண்டிலிருந்து மீளாய்வாண்டு இறுதி வரை செலுத்த வேண்டிய பெறுமதி சேர்வரி என தொடர்ச்சியாக நிதிக்கூற்றுக்களில் முன்கொண்டுவரும் ரூபா 2,475,723 தொகையினை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(உ) 2009 ஆண்டு முதல் 2014 ஆண்டு வரையான நிதிக்கூற்றுக்களில் முன்கொண்டு வரப்பட்டிருந்த கூட்டுத்தொகை ரூபா 617,763 தொகையான அட்டுறு செலவு மீளாய்வாண்டின் போதும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

### 2.4 சட்டங்கள்விதிகள் , பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்

| | சட்டங்கள்விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| (அ) | 2011 ஏப்ரல் 21 திகதிய இலக்கம் எம்ஒஎப்பீ/ஈஆர்டீ/ 2011/1 இலக்க நிதி மற்றும் திட்டமிடல் சுற்றறிக்கை | வெளிநாட்டு மூல வளங்கள் திணைக்கத்தை அறிவுறுத்தாமல் 2015 ஆண்டின் போது ரூபா 2,443,833 தொகை பெறுமதியான கொரியன் செயற்திட்டமொன்றும் மற்றும் 2013 ஆண்டின் போது ரூபா 9,471,966 தொகை பெறுமதியான இந்திய இலங்கை செயற்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) | 2000 ஜனவரி 19 ஆம் திகதிய 380 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரிவு 7.1 | உசாத்துணை சேவை வருமானத்திலிருந்து நேர்க் கிரயத்தை கழித்த பின்னர் 10 சதவீதம் முதல் 25 சதவீதம் வரையான விகிதாசாரத் தொகையொன்று நிறுவகத்தினால் தடுத்து வைத்து மீதித் தொகையை திறைசேரியின் விஷேட நிதியத்திற்கு 03 மாதங்களுக்கு ஒருமுறை அனுப்பப்பட வேண்டுமெனினும் அவ்வாறு செய்திருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 56,290,243 இற்கான மிகையொன்றாக இருந்ததுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மிகை ரூபா 26,282,796 தொகையாக காணப்பட்டமையால், முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 30,007,447 இற்கான வளர்ச்சி ஒன்றினை காட்டியது. மீண்டுவரும் செலவுகளுக்கான அரசாங்க பங்களிப்பு மற்றும் ஏனைய வருமானங்கள் ரூபா 6,655,145 இனால் அதிகரித்தல், ஊழியர் ஊதியச் செலவுகள் ரூபா 25,967,017 இனால் குறைவடைதல் மற்றும் பராமரிப்புச் செலவு ரூபா 3,032,707 இனால் குறைவடைதல் மேற்கூறிய வளர்ச்சியை முக்கியமாகப் பாதித்திருந்தது.

மீளாய்வாண்டினதும் கடந்த 04 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்யும் போது 2012 ஆண்டின் போது ரூபா 22,628,443 தொகையான மிகை 2014 ஆண்டு வரை தொடர்ச்சியாக வளர்ச்சி அடைந்திருந்தது. 2015 ஆண்டின் போது, 2014 ஆண்டிற்கு ஒப்பாக மிகை 52 சதவீதத்தினால் குறைந்திருந்த போதிலும் 2016 ஆண்டின் போது மீண்டும் வளர்ச்சி அடைந்திருந்தது. எவ்வாறாயினும் நிதி விளைவுகளுக்கு ஊழியர் வேதனம் மற்றும் நடைமுறை அல்லாத சொத்துக்களுக்காக பெறுமானத்தேய்வு மீண்டும் சீராக்கல் செய்யும் போது 2012 ஆண்டின் போது ரூபா 282,478,889 தொகையாகக் காணப்பட்ட நிறுவகத்தின் பங்களிப்பு இடையுறாது வளர்ச்சியடைந்து மீளாய்வாண்டின் போது ரூபா 439,637,022 தொகையாகியிருந்தது.

### 3.1 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

நடைமுறை விகிதாசாரம் 6.76:1 காணப்பட்ட போதிலும் நடைமுறை சொத்துக்களில் 87 சதவீதம் காசு மற்றும் காசுக்கு சமமானவைகளும் அடங்கியிருந்ததுடன் திரவ சொத்துக்களில் கணிசமான அளவு பணமொன்று தடுத்து வைக்கப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றுகை

1994 இன் 11 ஆம் இலக்க விஞ்ஞானம் மற்றும் தொழிநுட்பத்தை முன்னேற்றும் சட்டத்தின் பிரகாரம் இலங்கை தொழிநுட்பத்தை விரைவான கைத்தொழில் மயமாக்குவதற்கு தேவையான தொழிநுட்ப மட்டத்தை உயர்த்துதல் நிறுவகத்தின் முக்கிய குறிக்கோளாக இருந்ததுடன், அதனது கருமங்கள் பின்வருமாறு.

- கைத்தொழில்களில் பயன்படுத்தும் தொழிநுட்ப செயற்பாடுகள் மற்றும் முறைகளை முன்னேற்றுவதற்காக செயற்பாடுகள் மற்றும் உபாய முறைமைகளை கண்டுபிடித்தல், பரிசோதனைகள், விசாரணைகள் மற்றும் ஆய்வுகளை உடன்படிக்கைகளின் பிரகாரம் பெற்றுக்கொள்ளல், தொழிநுட்ப சேவை மற்றும் உசாத்துணை சேவை வழங்குதல் மற்றும் தொழிநுட்ப சாட்டுதல்கள், தொழிநுட்ப இணக்கங்கள், புதுத் தொழில் நுட்பங்களை அபிவிருத்தி செய்யும் விடயங்களில் ஈடுபடுவதன் மூலம் கைத்தொழில்களுக்கு உதவுதல்.

- கைத்தொழில் தொழிநுட்ப அபிவிருத்தியினை விரைவாக்கும் நோக்கில் ஆய்வுகள் நடத்துதல் ‘‘செல்ப் தொழிநுட்பம்’’ தொடர்பான தகவல்களை சேகரித்தல், தயாரித்தல் மற்றும் பகிரங்கப்படுத்துதல்.

- நிறுவனம் பெற்றுள்ள அனுபவத்தினூடாக குறிப்பிட்ட துறைகளிலுள்ள நபர்களுக்கு பயிற்சி வழங்குதல்.

- சுற்றாடல் மாசடைதல் தொடர்பாக மீளாய்வு மற்றும் கணிப்பீடு செய்யும் விடயங்களுடன் தொடர்பு வைத்து செயற்படுதல் மற்றும் குறைப்பதற்கான பரிகாரங்களை விதந்துரைத்தல்.

- அரச திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள் தொழிநுட்ப கல்லூரிகள் மற்றும் ஏனைய சபைகளுடன் கேள்விகள் இணைந்த விதப்புரை விடயங்களில் ஒத்துழைப்புடன் செயற்படுதல்.

மேற்கூறிய குறிக்கோள்கள் மற்றும் கருமங்களை நிறைவேற்றுவது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

2016 ஆண்டு தொடர்பாக செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கும் போது ஆய்வு மற்றும் அபிவிருத்தி செயற்திட்டங்களுக்காக ரூபா 23,390,000 தொகை ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் செய்வதற்கு எதிர்ப்பார்த்திருந்த விடயங்கள் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக செயலாற்றுகைகளை செயல் நடவடிக்கைத் திட்டத்துடன் இணக்கஞ் செய்ய முடியாதிருந்தது.

## 4.2 முகாமைத்துவச் செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மாலபே கட்டிடத் தொகுதியில் முதலாம் கட்ட விவசாய உணவு தொழிநுட்ப கட்டிடம் (Agro Food Technology Building) அமைச்சின் செயற்திட்டமொன்றின் கீழ் ரூபா 831,253,856 இற்கான செலவு ஒன்று மேற்கொள்ளப்பட்டு நிர்மாணித்து நிறுவகத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும் அக் கட்டிடத்தைச் சட்டரீதியாக உரித்தாக்குவதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) ஐரோப்பிய சங்கத்தின் நிதி உதவியின் கீழ் ஆரம்பிக்கப்பட்டிருந்த செயற்திட்டமொன்று உடன்பட்டிருந்தவாறு செயற்படுத்தப்படாமையால் ஏற்பட்டிருந்த நட்டத்தை ஈடு செய்வதற்காக ரூபா 13,279,398 தொகை ஐரோப்பிய சங்கத்திற்கு திருப்பி செலுத்த வேண்டி நேரிட்டிருந்தது.

## 4.3 பெறுகைகள் மற்றும் ஒப்பந்த நடைமுறைகள்

மாலபே தொழிநுட்பவியல் கட்டிடத்தில் 3 மாடிகளின் மற்றும் நிருவாக கட்டிடத்திற்காக தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் வழங்குதல் மற்றும் பொருத்துதல், அறைகள் வேறுபடுத்தல், சிவிலின் நிர்மாணித்தல், வர்ணம் பூசுதல் மற்றும் மின்சார உபகரணங்கள் பொருத்துவதற்காக ரூபா 46,430,000 தொகைக்கான ஒப்பந்தக்காரருடன் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதற்காக ரூபா 27,848,021 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) பண்டங்கள் வழங்குதல் மற்றும் நிர்மாண வேலைகள் ஒரே விலை கோரலின் கீழ் உட்படுத்தி விலைகோரல் அழைக்கப்பட்டிருந்தமையினால் போட்டித்தன்மை வரையறுக்கப்பட்டிருந்துடன் அதற்கான இரண்டு விலைகோரல்கள் மாத்திரம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

(ii) வேலை (works) மற்றும் பண்டங்கள் வழங்குதல் (goods) என்பவற்றிற்காக வெவ்வேறாக உடன்படிக்கை படிவங்கள் பயன்படுத்தப்பட வேண்டும். எனினும் வேலைகள் மற்றும் பண்டங்கள் வழங்குதல் இரண்டிற்கும் ஒரே படிவத்தில் உடன்படிக்கைகள் பயன்படுத்தப்பட்டிருந்தன.

(iii) பண்டங்கள் வழங்குவதற்காக வழங்குனருடன் மேற்கொண்டிருந்த உடன்படிக்கையின் பிரகாரம் 2015 நவம்பர் 15 திகதி முதல் 120 நாட்களில் ஒப்பந்தத்தை பூர்த்தி செய்வதற்காக வழங்குனர் இணங்கியிருந்த போதிலும், 2017 ஜூலை 12 திகதி வரை வழங்குனர் ஒப்பந்த வேலை பூர்த்தி செய்திருந்தார் என உறுதிப்படுத்தப்படவில்லை.

(iv) நிர்மாண வேலைகளை மேற்பார்வை செய்வதற்காக பெறுகைகள் நடைமுறைகள் கடைபிடித்து உசாத்துணையாளர் ஒருவரை தெரிவு செய்வதற்குப் பதிலாக கட்டிடத்தின் நிர்மாண வேலைகளை மேற்பார்வை செய்த தனியார் கம்பனிக்கே மேற்பார்வை விடயங்களும் ஒப்படைக்கப்பட்டு அதற்காக ஒப்பந்தத்தில் உடன்பட்டிருந்த தொகையில் 6 சதவீதம் அவற்றில் ரூபா 2,815,000 தொகை செலுத்துவதற்கு இணங்கியிருந்தது. அதில் ரூபா 1,913,595 தொகை 2016 ஆண்டு கொடுப்பனவு செய்திருந்த போதிலும் ஒப்பந்த வேலைகளை குறிப்பிட்ட தினத்தில் பூர்த்தி செய்வதற்காக உசாத்துணை நிறுவகம் செயற்பட்டதற்கான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

(v) 2016 செப்தெம்பர் 29 திகதி வழங்குனருக்கு இரண்டாவது இடைக்கொடுப்பனவு என ரூபா 17,623,761 தொகை கொடுப்பனவு செய்யும் போது ஒப்பந்த உடன்படிக்கையில் 6 ஆம் பந்தியின் பிரகாரம் ஒப்பந்தப் பெறுமதியின் தாமதக் காலத்திற்காக மாதத்திற்கு 1 சதவீதம் கூட்டுத்தொகை ரூபா 2,815,800 தொகையான தாமதக் கட்டணத்தை அறவீடு செய்வதற்காக இயலுமாக இருந்தும் கூட நிறுவகத்தினால் தாமதக் கட்டணம் அறவீடு செய்திருக்கவில்லை.

## 4.4. பதவியணியினர் நிருவாகம்

நிறுவகத்திற்காக அங்கீகரித்திருந்த பதவியணியின் 392 தொகையாக இருந்த போதிலும் உள்ளவாறான பதவியனியினர் 349 தொகையாக இருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) நடைமுறை ஆண்டின் போது நிறைவேற்றுத் தர மட்டத்தில் பதவிகளில் 54 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் அவ் வெற்றிடங்களுக்காக ஆட்சேர்ப்பு நடைபெற்றிருக்கவில்லை.

(ii) வெற்றிடமாகிய பதவிகளில் விடயங்களை மேவகை செய்வதற்காக 22 உத்தியோகத்தர்கள் சேர்க்கப்பட்டிருந்த போதிலும் அதற்காக முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தின் அங்கீகாரத்தை பெற்றிருக்கவில்லை.

(iii) வெற்றிடமான பதவிகளில் 54 உம் பதவியணித் தர வெற்றிடங்களாக இருந்ததுடன் இந்த வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பு மேற்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படாமை நிறுவகத்தின் செயற்திறமைக்கு நேரடியாகப் பாதித்திருந்தது.

## 4.5 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்படும் சொத்துக்கள்

கூட்டுத்தொகை ரூபா 1,820,645 தொகையான மீதிகள் காணப்படும் 4 வங்கி நடைமுறைக் கணக்குகள் 05 வருடங்களை விட மிகையான காலம் முதல் செயற்படாத நிலையில் பேணப்பட்டிருந்தது.

## 4.6 சிக்கமனற்ற கொடுக்கல் வாங்கல்கள்

Cry/2A/Elisa Kit உபகரணம் 2106 ஆகஸ்ட் 29 திகதி கட்டளையிடப்பட்டிருந்ததுடன் 2016 அக்தோபர் 15 தகிதி விமான நிலைய பண்டகசாலைக்கு கிடைத்திருந்ததென கணக்காய்விற்கு சமர்ப்பித்திருந்த தகவல்களின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டது. இந்த உபகரணங்களை கொண்டுவரும் போது மற்றும் களஞ்சியப்படுத்தும் போது விதந்துரைக்கப்பட்ட குறைந்த வெப்பநிலை மட்டத்தில் பேணப்பட வேண்டுமெனினும் அவ்வாறு செயற்படாமையால் அதனைப் பயன்படுத்த முடியாத நிலையில் காணப்பட்டதுடன், நிறுவகத்தினால் 2017 ஜூலை 20 அளவிலும் இந்தப் பண்டங்களை விடுவித்திருக்கவில்லை. இதன் காரணமாக பண்டத்தை கொள்வனவு செய்வதற்காக செலவிடப்பட்ட ரூபா 83,804 இற்கான தொகை சிக்கமனமற்ற செலவு ஒன்றாக மாறியிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 செயல் நடவடிக்கைத் திட்டம்

நிறுவகத்தினால் மீளாய்வாண்டிற்காக செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரித்திருந்த போதிலும், 2014 பெப்ரவரி 17 திகதிய 01/2014 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் பந்தி 4(இ) இன் பிரகாரம் செயற்படுத்தும் கால சட்டகம் ஒன்று மற்றும் அச் செயற்பாடுகளில் எதிர்பார்த்த விளைவளவு பெறுபேறுகளை உள்ளடக்கி செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரித்திருக்கவில்லை.

### 5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான பாதீட்டில் மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளவாறான செலவுகள் இடையே 49 சதவீதம் முதல் 85 சதவீதம் வரையான முரண் ஒன்று காட்டப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவி ஒன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

### 5.3 உள்ளகக் கணக்காய்வு

2014 அக்தோபர் 01 ஆம் திகதி முதல் வெற்றிடமாக காணப்பட்ட தலைமை உள்ளகக் கணக்காய்வாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பு நடைபெற்றிருக்கவில்லை. மேலும், உள்ளகக் கணக்காய்வு பிரிவின் 2 உத்தியோகத்தர்கள் மாத்திரம் சேவையில் ஈடுபட்டிருந்ததுடன் நிறுவகத்தின் செயல் நோக்கின் மீது கவனம் செலுத்தும் போது அலுவலர்களின் எண்ணிக்கை போதியளவானதாக காணப்படவில்லை என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு குறைபாடுகள் அவ்வப்போது தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்பு | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | கணக்கீடு | கணக்கு பதிவதற்காக நிறுவகத்தினால் பயன்படுத்தப்படும் கணனி நிகழ்ச்சித் திட்ட முறைமை குறைபாடுகளுடன் காணப்பட்டமை. |
| (ஆ) | நிதியக் கட்டுப்பாடு | வங்கி நடைமுறை கணக்குகளில் பயன்படுத்தப்படாத காசு மீதிகள் காணப்படல். |
| (இ) | நிலையான சொத்துக்கள் கட்டுப்பாடு | செலவு மெய்மையாய்தல் மேற்கொள்ளப்படாமை மற்றும் சொத்துக்கள் குறை பயன்பாட்டுடன் காணப்படல். |
| (ஈ) | மனித வள முகாமைத்துவம் | வெற்றிடங்கள் காணப்படல் மற்றும் மற்றும் ஆட்சேர்ப்பு நடைமுறையில் இருந்து விளகல் காணப்படல். |

| | | |
|---|---|---|
| (உ) | உள்ளகக் கணக்காய்வு | உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் விதப்புரைகளுக்கு இணங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமை மற்றும் உள்ளகக் கணக்காய்வு பிரிவின் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்படாமை. |
| (ஊ) | செயற்பாட்டு நிருவாகம் | மேற்கொள்ளப்படும் செயற்திட்டங்கள் குறிப்பிட்ட காலத்தில் பூர்த்தி செய்யப்படாமை மற்றும் எதிர்ப்பார்த்த பெறுமதியினை நெருங்கியிருக்காமை. |
| (எ) | ஒப்பந்த நிருவாகம் | மாலபே நிருவாகக் கட்டிட நிர்மாணவேலைச் செயற்திட்டம் உடன்பட்டிருந்த திகதியில் பூர்த்தி செய்வதற்கு முடியாது போதல். |